**உத்தேச கொத்தலாவல தேசியப் பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டமூலம் மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டத்துக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் பற்றிய அறிக்கை**

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
ஆகஸ்ட் 2021

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பாகிய நாம், சமமான வாய்ப்புக்கள் மற்றும் ஜனநாயக உரிமைகளுக்காக ஆதரித்துவாதிடுவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்ற ஒரு சிவில் சமூக நிறுவனம் என்ற வகையில், உத்தேச கொத்தலாவல தேசியப் பாதுகாப்புப் பல்கலைக்கழக (KNDU) சட்டமூலம் மற்றும் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்துக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் ஆகியன பற்றிய எமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் கடமை எமக்குள்ளது என நம்புகின்றோம்.

**கல்வியை இராணுவமயமாக்கல்**

KNDU சட்டமூலம், இராணுவ அதிகாரிகளினால் நடாத்திச் செல்லப்படும் ஓர் உயர்கல்வி முறைமை நிறுவப்படுவதனை முன்மொழிகின்றது. உண்மையில், துணை வேந்தர் உட்பட, ஒன்பது சபை உறுப்பினர்களுள் ஐந்து பேர் செயல்முனைப்புள்ள இராணுவ சேவை சார்ந்த பதவிகளில் உள்ளவர்களாகக் காணப்படுவர். இப்பல்கலைக்கழக முறைமையானது குறிப்பிட்ட வகை சிந்தனைப் போக்கினால் மாத்திரமே கட்டுப்படுத்தப்படும் என்பதை மறுக்க முடியாது. குடியியல்சார் நிருவாக வகிபாகங்களை நிரப்புவதற்கு ஒழுக்கமுள்ள பிரஜைகளையும், இச்சூழமைவில், அத்தியவசியமாகக் கட்டளைகளைப் பின்பற்றுவோரையும் உருவாக்க விரும்புவது பற்றி அரசாங்கம் வெளிப்படையாக இருந்துள்ளது.

இலங்கையின் முக்கியமான நிருவாகப் பதவிகளுக்கு 28 இராணுவ மற்றும் புலனாய்வு அதிகாரிகள் நியமிக்கப்பட்டதனூடாக குடியியல்சார் பணிகளை இராணுவமயமாக்கல் துரிதமடைந்துள்ளது. 'கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய தொழிற்பாட்டு நிலையத்துக்கு' இராணுவத் தளபதி தலைமை வகிப்பதன் மூலம், கொவிட்-19 பெருந்தொற்றுக்கு பதிலளிக்கும் செயற்பாடுகூட கடுமையான முறையில் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, சிவில் நிருவாகத்தின் அதிகமான அம்சங்களை இராணுவத்தின்கீழ் கொண்டுவர அரசாங்கம் காட்டுகின்ற ஆர்வத்தின் மூலம் எமக்கான அபாய அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய KDU சட்டம் மாணவர்களின் சுதந்திரமான கருத்து வெளிப்பாட்டுக்கும் கருத்து வேறுபாடுகளைத் தெரிவிப்பதற்குமான உரிமையை அடக்குவதற்கான ஏற்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இது இராணுவப் பயிற்சியின் ஒரு பாகமாக இருந்தாலும், சுதந்திரமான சிந்தனையை வளர்த்தெடுப்பதை முக்கிய அம்சமாகக் கொண்ட குடியியல்சார் உயர்கல்விக்கு பொருத்தமற்ற ஒன்றாகவே கருதப்படுகின்றது.

**ஒழுக்கமுள்ள பிரஜை**

KNDU ஏற்பாடுகளுக்கான தேவை பற்றி விளக்கமளிக்கையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். ‘‘தொழில் சந்தைக்குப் பொருத்தமான ஒழுக்கமுள்ள மாணவர் தலைமுறை ஒன்றைத் தற்போது உருவாக்கி வருகின்ற (KDU) பல்கலைக்கழகமானது பெற்றோர் மற்றும் மாணவர்கள் உட்பட சமூகத்தினால் மிகவும் மதிக்கப்படுவதுடன் உயர்ந்தளவிலான வரவேற்பையும் பெற்றுள்ளது. இப்பல்கலைக்கழகம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்கின்றமை அதற்கான பிரதான காரணங்களுள் ஒன்றாக அமைந்துள்ளது.’’

முதலாவதாக நாங்கள் ஒழுக்கம் குறித்தே கரிசனை கொள்கின்றோம். அதாவது, ஒரு நிறுவனம் உருவாக்கக் கருதுகின்ற குடிமக்களிடமிருந்து இராணுவமயப்படுத்தப்பட்ட ஒழுக்கமொன்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இராணுவ ஒழுக்கம் என்பது குடிமக்களிடமிருந்தும் இளைஞர்களிடமிருந்தும் தேவைப்படுத்தப்படுகின்ற ஒரு தனிவேறான தராதரமாகும். மாணவர்களின் செழிப்பான மற்றும் சுதந்திரமான சிந்தனைப் போக்குகள், எதற்குமே எதிர்ப்புக்காட்டாது எல்லாவற்றுக்கும் இணங்கி நடக்கும் பிரஜை ஒருவரின் நடத்தைக்குப் பொருந்தக்கூடிய வகையில் அடக்கப்படக் கூடாது.

1943ஆம் ஆண்டில் CWW கன்னங்கர குழுவின் அறிக்கை கல்வி பற்றிய தொலைநோக்குள்ள நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றது. குறித்த அறிக்கையில், ‘‘கல்வி முறைமையானது முதலில் தனிநபர் ஒருவரின் செல்வத்தை அல்லது சமூக அந்தஸ்தைப் பொருட்படுத்தாமல் அவருக்கு இயலுமாகவுள்ள உடல், உள மற்றும் ஒழுக்கநெறி சார்ந்த மேம்பாட்டை உயர்ந்தளவில் அடைந்துகொள்வதற்கும், இரண்டாவதாக, தனிநபர் ஒருவர் *அவரது கல்வியின் விளைவாக, அவரின் ஆற்றல்களை தேசத்தின் நன்மைக்காக முழுமையான சாத்தியமிக்க வழிமுறையில் பயன்படுத்த முடியுமானவராக இருப்பதற்கும், அரச விவகாரங்களில் அவர் தனது முடிபுகளை மேற்கொள்வதற்கு இயலுமானவராக இருப்பதற்கும் அத்துடன் அரசு அவருக்கு வழங்கியுள்ள வாக்குரிமையை புத்திசாதுரியமாகப் பிரயோகிப்பவராக இருப்பதற்கும்* அவருக்கு உதவ வேண்டும்’’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, கல்வி என்பது, அதன் உண்மையான வடிவத்தில், புத்திசாதுரியமான மற்றும் சுயாதீனமான பிரஜைகளை வளர்த்தெடுக்க வேண்டுமே தவிர, வெறுமனே கட்டளைகளைப் பெற்று அவற்றைச் செயற்படுத்துபவர்களை அல்ல.

அமைச்சினது அறிக்கையின் இரண்டாவது பகுதியும் சிக்கலுக்குரியதாகவே உள்ளது. ஏனெனில், அரசாங்கம் இராணுவமயப்படுத்தப்பட்ட கல்வி முறைமையை அரச பல்கலைக்கழகங்களில் நிலவும் திறமையின்மைகளை வெற்றிகொள்வதற்கான வழிமுறையொன்றாகப் பார்ப்பதாகத் தெரிகின்றது. எவ்வாறாயினும் KNDU என்பது கட்டணம் செலுத்தக்கூடிய ஒரு பல்கலைக்கழகமாகவே இருக்கும். இது ஏலவே பாரபட்சமான கல்வி முறைமையொன்றை உருவாக்கியுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) கீழுள்ள தற்போதைய பல்கலைக்கழக முறைமையில் இனங்காணப்பட்ட எந்தப் பிரச்சினையையும் அது தீர்க்கவில்லை. தற்போதைய பல்கலைக்கழக

முறைமையை மிகவும் திறமையானதாக மாற்றுவதற்குப் பதிலாக, அரசாங்கம் விரைவான - ஆனால் வெற்றிக்கான சாத்தியமில்லாத - தீர்வொன்றை அறிமுகப்படுத்தவே முயற்சிக்கின்றது எனப் புலப்படுகின்றது.

**பல்கலைக்கழகங்கள் சட்டத்துக்கான திருத்தம்**

KNDU சட்டமூலத்துக்கு எதிர்ப்புக்கள் கிளம்பிய நிலையில், அரசாங்கம் 2021 ஜூலை மாதத்தில் பல்கலைக்கழகங்கள் சட்டத்துக்கான திருத்தங்களை அவசரமாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிட்டது. இப்புதிய திருத்தமானது ‘குறிப்பான நோக்கத்துக்கான பல்கலைக்கழகம்’ ஒன்றைத் தாபிப்பதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்குகின்றது. இத்திருத்தம் கொண்டுவரப்பட்ட சூழ்நிலை மற்றும் காலம் என்பவற்றின் அடிப்படையில், KNDU ஐ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்கீழ் கொண்டுவருவதற்கான ஒரு வீண் முயற்சியே இது என்று முடிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

இப்புதிய சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கூடாக, பயிலிளவல்களுக்கான (cadets) ஒரு கல்விக்கூடம் என்ற வகையிலமையும் KDU இனது விசேடமான செயற்பாடு அல்லது ‘குறிப்பான நோக்கம்’ என்பது, சாதாரண குடிமக்களாகவுள்ள மாணவர்களுக்கு (civilian students) இக்கல்விக்கூடத்தின் கதவுகள் திறக்கப்படும் வாய்ப்பை இழக்கச் செய்கின்றதா என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. ஒன்றில் இளம் பயிலிளவல்களைப் பயிற்றுவிக்கும் குறிப்பான நோக்கத்தின் மூலம் KNDU என்பது உயர்கல்வி நிறுவனமொன்றாக இல்லாதொழியும் அல்லது இத்திருத்தத்தின் மூலம் அரசாங்கம் KNDU இன் நோக்கம் இராணுவமயப்படுத்தப்பட்ட கல்வி என்பதை ஒப்புக்கொள்கின்றது. இராணுவக் கல்வியை மேற்பார்வை செய்வதற்கான அதிகாரம் மற்றும் தகுதி என்பன பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு உள்ளதா என்பதும் இங்கு கேள்விக்குறியாக அமைகின்றது.

ஆகவே இந்தத் தீர்மானங்களின் பின்னாலுள்ள நியாயத்தையும், இலங்கையில் உயர்கல்வியின் எதிர்காலம் தொடர்பில் இந்த அரசாங்கத்திடம் காணப்படும் தொலைநோக்கையும் நாம் இங்கு கேள்விக்குட்படுத்துகின்றோம். இது தொடர்பிலான ஏதேனும் மாற்றம் கல்வியியலாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களுடனான கலந்தாலோசனைச் செயன்முறையுடன் மேற்கொள்ளப்படும் என நாம் வலுவாக நம்புகின்றோம்.